12th November 1957]

(*d*) Regional Transport Authorities were reconstituted with effect from 17th September 1957 and State Transport Authority from 26th October 1957.

Madras Temple Entry Authorization Act, 1947.

* 147 *Q*.—SRI P. G. MANICKAM: Will the Hon. the Minister for Home be pleased to state—

(*a*) the number of temples under the control of the Hindu Religious and Charitable Endowments Department; and

(*b*) the various measures adopted for enforcing the provisions of the Madras Temple Entry Authorization Act, 1947?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: (*a*) On 1st April 1957, 7,467 assessable institutions and 4,796 minor institutions not assessable for contribution were under the control of the Department.

(*b*) Circular instructions were issued to the subordinate officers to visit the temples in which excluded caste people have had entry. Directions to remove any innovation or obstruction to worship, etc., were issued to cases where such innovations had been reported. The public were also enlightened of the provisions of the Act for the removal of the disabilities imposed by custom or usage. Bhajana parties by Ramakrishna Mission, etc., were arranged in the Harijan colonies. Steps are also being taken to appoint Harijans as trustees where suitable applicants are available. Harijans as menials are also appointed. In every Area Committee, a Harijan member has been got appointed. Harijans are also being appointed as Executive Officers of religious institutions wherever qualified persons are available.

SRI P. G. MANICKAM: தற்பொழுது தெரிவிக்கப்பட்டுள்ள கோவில்களிலே எத்தனை கோவில்கள் இந்த 10 ஆண்டுகளுக்குள்ளாக ஹரிஜனங்களுக்காக திறந்து விடப்பட்டிருக்கின்றன என்பதை அறியவிரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM: ஹரிஜனங்களுக்கு இந்தக் கோவில்கள், அந்தக் கோவில்கள் திறக்கப்பட்டிருக்கின்றன என்ற விஷயமே இல்லை. சட்டப்படி எல்லா கோவில்களும் திறக்கப்பட்டிருக்கின்றன.

SRI A. V. P. ASAITHAMBI: தஞ்சை ஜில்லா திருவையாற்றில் ஒரு கோவிலில் பிராமணர்களைத் தவிர மற்றவர்கள் நுழையக் கூடாது என்று உயர் நீதி மன்றம் தீர்ப்பு அளித்திருந்ததே. அந்த முடிவு எந்த நிலைமையில் இருக்கிறது ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM: அப்படி ஒரு நீதிமன்றம் தீர்ப்பு அளித்திருந்தால், அது சட்டப்படி 'பப்ளிக் டெம்பிளின்' கீழ் வராது. 'பிரைவேட் டெம்பிளாக' இருந்தால் அவர்களுடைய இஷ்டம்.

SRI M. C. MUTHUKUMARASWAMI: பல ஆயிரக்கணக்கான ஆலயங்கள் சர்க்கார் பார்வையில் இருக்கும்போது, தருமபுரம், திருவாடுதுறை, திருப்பனந்தாள் முதலிய ஆதீனங்களுக்குட்பட்ட ஆலயங்கள் சர்க்கார் ஆதிக்கத்திற்கு உள்படாமலே, இன்னும் தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்தில் இருப்பதற்குக் காரணம் என்ன என்பதை அறிய விரும்புகிறேன்.

[12th November 1957

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அப்படி ஆலயங்களிலே பாகுபாடு ஒன்றுமில்லே. மடங்களே பரிபாலனம் செய்துவருபவர் கள், மற்ற ஆலயங்களே தர்மகர்த்தாக்கள் பரிபாலனம் செய்வதுபோல், மடாதிபதிகள் பரிபாலனம் செய்துவருகிறார்கள். அவர்களும் சர்க்காரின் கட்டுப்பாடுகளுக்கும், திட்டங்களுக்கும், மேற்பார்வைக்கும் உட்பட்டவர்கள் தான்.

SRI M. JAGANNATHAN : Will the Government consider the desirability of issuing a statement inviting information from the members of the public, Harijans and non-Harijans, regarding such of those public temples where Harijans are not admitted so that the Government take the initiative to see that such temples are thrown open at the earliest possible time ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : I do not think that is a correct approach. All the temples are thrown open under the Act. If there is any obstruction in any temple, hon. Members of the Legislature and other members of the public and those affected might bring it to the notice of the Government and then the Government will take appropriate action.

SRI S. LAZAR : After the passing of this Act, how is the response to it ? Do the Harijans make full use of it ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : That depends on the attitude of the individual persons concerned.

SRI A. VEDARATNAM PILLAI : இந்த சட்டத்தின் பிரகாரம் தஞ்சை தாலுகா வரகூரிலுள்ள ஆலயத்தில் ஹரிஜனங்கள் அல்லது மற்ற சில ஜாதி ஹிந்துக்கள் பிரவேசிக்க முடியாது இருந்து, முந்திய சட்டசபையில் ஒரு திருத்தம் கொண்டுவந்து, அதன் பின்னும் இங்கே இதரர்கள் பிரவேசிக்க முடியாத ஒரு நிலைமை அங்கே இருப்பது கனம் மந்திரி அவர்களுக்குத் தெரியுமா ? அப்படியிருந்தால் அதை நீக்குவதற்கு என்ன முயற்சி எடுத்துக்கொண்டிருக்கிறார்கள் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இது விஷயம் பற்றி தனியாக ஒரு கேள்வி கேட்டால் அல்லது எனக்கு விவரங்கள் கொடுத்தால் அதை கவனித்து வேண்டிய நடவடிக்கை எடுத்துக் கொள்ளலாம்.

SRI K. B. S. MANI : ஆண்டவன் எல்லோருக்கும் பொது என்ற பண்பாடு உள்ள நம் நாட்டிலே, தனிப்பட்ட ஒரு சிலருடைய கோவில் களுக்கு மட்டும் ஹரிஜனங்கள், மற்ற சில ஜாதி ஹிந்துக்கள் நுழைவதி லிருந்து விதிவிலக்கு என்றால் அதில் நியாயம் என்ன ? அதை இந்தச் சபையும், சர்க்காரும் ஏற்றுக்கொள்ளுகிறதா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : தனிப்பட்டவர்கள் கோவில்களில் எல்லோருக்கும் பொதுவாகக் கருதப்படுகின்ற ஆண்டவன் இல்லே என்றுதான் அர்த்தம்.

SRI R. SWAMINATHA MERKONDAR : தஞ்சை தாலுகா என்னுடைய தொகுதியில் இருக்கும் வராகூர் கோவிலில் இப்பொழுதும் ஹரிஜனங்கள் அனுமதிக்கப்படுகிறார்கள் என்பது அமைச்சர் அவர்களுக்குத் தெரியவருமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தத் தகவலே எனக்குமட்டுமல்ல, இங்கே உள்ள அங்கத்தினர்கள் எல்லோருக்கும் தெரிவித்ததுபற்றி கனம் அங்கத்தினர் அவர்களுக்கு என் நன்றி.

12th November 1957]

SRI M. C. MUTHUKUMARASWAMI : ஹரிஜனங்களை அனுமதிக்காத ஆலயங்களில் ஆண்டவன் இருப்பதாக நம்ப முடியாது என்று அமைச்சர் அவர்கள் சொல்லுகிருர்கள். ஆண்டவன் இருக்கின்ற கோவில்களில் ஹரிஜனங்கள் ஒருவரைக்கூடப் போடுவதில்லை என்பதை கவனித்து, இனியாவது அங்கே ஹரிஜனங்களைப் போடுவதற்கு நடவடிக்கைகள் எடுத்துக்கொள்ளுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : ஹரிஜனங்களைப் போட்டால்தான் ஆண்டவனுடைய ஸ்வரூபம் வெளிப்படும் என்று அர்த்தமில்லை. எங்கெங்கே சாத்தியப்படுகிறதோ, அங்கெல்லம் தாழ்த்தபட்டவர்களை நிர்வாக அதிகாரிகளாக, தர்மகர்த்தாக்களாக அரசாங்கம் போட்டுக்கொண்டுதான் இருக்கிறது.

SRI V. K. KOTHANDARAMAN : தனிப்பட்டவர்கள் ஆதிக்கத்தில் இருக்கக்கூடிய மடங்களிலும் கோவில்களிலும் தாழ்த்தப்பட்டவர்கள் அனுமதிக்கப்படமாட்டார்கள் என்ற நிலைமை இருப்பதால் தாழ்த்தப்படுத்தப்பட்ட மக்களின் மனது புண்படுத்தப்படுகின்றது. ஆகையால் இந்த சட்டத்தின் அடிப்படையிலேயே தனிப்பட்டவர்களின் ஆதிக்கத்தின் கீழ் இருக்கும் கோவில்களிலும் மடங்களிலும் கூட தாழ்த்தப்பட்டவர்களை அனுமதிப்பதற்கு சர்க்கார் உத்தரவு போடுவார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்தச் சட்டம் இயற்றப்படும்பொழுது பொதுக் கோவில்கள், தனிப்பட்டவர்கள் கோவில்கள் என்ற வித்தியாசத்தின் அடிப்படையிலே இயற்றப்பட்டது. தனிப்பட்டவர் தன்னுடைய வீட்டில் ஒரு பிள்ளையாரை வைத்துக்கொண்டு பூஜை செய்துகொண்டிருந்தால் அங்கு யார் வேண்டுமானுலும் வரலாம் என்று சொல்லுவது சரியல்ல.

SRI N. R. THIYAGARAJAN : குறத்தி வள்ளியை மணமுடித்த குமரன் கோவிலுக்குள் குறவர்கள் நுழையக்கூடாது என்று சொல்லுவது நியாயமா ? குமரனை வைத்து பூஜை செய்யும் ஜாதி ஹிந்துக்கள் குமரனுக்கு பெண் கொடுத்த மாமன் வகையருவை உள்ளே நுழைய வேண்டாம் என்று சொல்லுவது சரியா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : எனக்கு ஒன்றும் புரியவில்லை. ஏதோ தமிழ் பாட்டாக இருக்கிறது.

SRI A. GOVINDASAMY : ஹரிஜனங்கள் ஆலயத்திற்குள் பிரவேசிக்கின்ற நேரத்தில் ஆண்டவனை வழிபடுவதற்கு அர்ச்சனை செய்ய வேண்டியிருக்கிறது. அவர்கள் இலவசமாக அர்ச்சனை செய்வதற்கு அனுமதிக்கப்படுவார்களா, அல்லது அவர்களும் காசு கொடுக்கவேண்டுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : அர்ச்சனையை அவர்கள் தாங்களே செய்து கொள்ளலாம். வேறு ஒருவர் செய்யவேண்டுமானுல், அவருக்கு ஏதாவது கொடுத்துத்தான் ஆகவேண்டும்.

SRI K. VINAYAKAM : தாழ்த்தப்பட்டவர்கள் தாராளமாக பொதுக் கோவில்களில் போகலாம் என்று சட்டம் செய்யப்பட்டிருந்தும்கூட, அவர்கள் சொந்த காரணங்களுக்காகவோ அல்லது கடவுள் மீது இருக்கிற விருப்பு வெறுப்பு காரணமாகவோ இந்தச் சட்டத்தை பயன்படுத்திக் கொண்டு கோவில்களுக்குள் போகாமல் இருக்கிருர்கள் என்பது அரசாங்கத்திற்குத் தெரியுமா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இதற்கு முன்னுல் இருந்த தடை நீக்கப்பட்டிருந்தாலும் தாழ்த்தப்பட்டவர்களை கோவில்களுக்குப் போகவேண்டுமென்று நிர்ப்பந்தம் செய்ய முடியாது. அவ்வாறே கோவில்களுக்கு போகிறவர்களுக்கு தடை இருப்பதற்கு அரசாங்கம் இடம் கொடுக்காது.

[12th November 1957

9-20 a.m. SRI T. S. RAMASWAMI PILLAI : பிள்ளையார் உடைப்பு போன்ற காரியங்கள் எப்படி மக்களுடைய மனதைப் புண்படுத்தும் என்று கருதுகிறோமோ, அப்படியே ஆலயங்களுக்குள் ஹரிஜனங்கள் போகக் கூடாது என்று சொன்னால் அவர்களுடைய மனம் புண்படாதா ? ஆகவே தனிப்பட்டவர்களுடைய கோயில்களிலும் இனி ஹரிஜனங்கள் போகலாம் என்பதற்கு ஏற்றவகையில் சர்க்கார் நடவடிக்கை எடுத்துக் கொள்வார்களா என்று அறிய விரும்புகிறேன்.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : மனம் புண் படுவதைத் தடுக்க அரசாங்கம் அவ்வப்போது நடவடிக்கை எடுத்து வருகிறது. ஆனால் ஒருவர் மனம் புண்படுகிறது என்ற காரணத்திற்காக தகாத காரியங்களில் அரசாங்கம் ஈடுபடாது. தகாத சட்டங்களையும் அர சாங்கம் கொண்டு வராது.

SRI P. G. MANICKAM : சென்னை சர்க்கார் இயற்றி இருக்கும் படியான இந்த ஆலயப் பிரவேச சட்டத்தை உலகமே பாராட்டு கிறது. இந்தச் சமயத்தில் சட்டத்தை அமுல் நடத்துவதற்காக எந்த எந்த ஆலயங்களில் எல்லாம் இன்னமும் ஆலயப்பிரவேசம் நடைபெற வில்லை என்பதைக் கணக்கெடுத்து அவற்றை நடத்துவதற்கு அரசாங்கத் தார் ஸ்பெஷல் ஆபீசரை நியமிக்க முயற்சிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன் ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்து மத பரி பாலன இலாகாவுக்கு உட்பட்ட கோயில்களில் எல்லாம் இம்மாதிரி ஹரி ஜனங்கள் உள்ளே நுழையக்கூடாது என்கிற தடை இருப்பதாக நான் உணரவில்லை. ஏதாவது ஒரு கோயிலில் இருக்கிறது என்கிற புகாரை குறிப்பாக கனம் அங்கத்தினர் சொன்னால் உடனடியாக அரசாங்கம் நடவடிக்கை எடுத்துக் கொள்ளும்.

SRI T. P. ELUMALAI : கனம் சபாநாயகர் அவர்களே, தனிப் பட்டவர்களின் கோயில்களிலும் ஹரிஜனங்களை அனுமதிப்பதற்கு சர்க்கார் சட்டசபை அங்கத்தினர்கள் கொண்ட ஒரு கமிட்டியைப்போட்டு முக்கியஸ் தர்களோடு கலந்து பேசி உடன்பாடு காண ஏற்பாடு செய்வார்களா ?

THE HON. SRI M. BHAKTAVATSALAM : இந்த யோசனை யின் பேரில் நடவடிக்கை எடுக்கவும் அரசாங்கத்திற்கு உத்தேசம் இல்லை.

Settlement of tenancy disputes.

* 148 *Q.*—SRI N. K. PALANISAMI : Will the Hon. the Minister for Revenue be pleased to state—

(*a*) whether the Government have taken steps to settle the dispute between the landlords and the 'Mattuvaramdars' and 'Kaivaramdars' of Tiruchirappalli district during August 1957; and

(*b*) if so, the details thereof?

THE HON. SRI M. A. MANICKAVELU : (*a*) & (*b*) Yes Sir. There were tenancy disputes in Nangavaram and its hamlets. After prolonged discussions between the landlords and the local officers, the disputes were settled in Nangavaram; the londowner agreeing to give a portion of the lands on lease and the kisans agreeing to cultivate a portion of the lands on waram basis. There are however still disputes in Manachanallur, Sreedevimangalam, Thimmachipuram, Kumaramangalam and Amoor villages.

Local officials are taking every effort to bring about an amicable settlement.